பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4
30 12 2025 TUESDAY 6 45 AM
வணக்கம் - மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. ராமேஸ்வரத்தில் இன்று நடைபெறவுள்ள காசி தமிழ்ச் சங்கமம் நிறைவு விழாவில் குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் சிறப்பு விருந்தினராக பங்கேற்கிறார்.

2. இந்தியா - இலங்கை மீனவர் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக கூட்டு பேச்சுவார்த்தையை மீண்டும் தொடங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

3. கடந்த 5 ஆண்டுகளில் பொருளாதாரத்தில் நாடு அதிவிரைவாக வளர்ச்சியடைந்து வருவதாக ஆளுநர் திரு. ஆர்.என். ரவி கூறியுள்ளார்.

4. மகளிர் முன்னேற்றத்திற்காக திமுக அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

5. தேசிய துப்பாக்கிச் சுடுதல் சாம்பியன் போட்டியின், ஜூனியர் மகளிர் குழுப் பிரிவில் தமிழக அணி வெள்ளிப்பதக்கம் வென்றது.

>>>>>><<<<<<<

குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் இன்று தமிழகம் வருகை தருகிறார்.

ராமேஸ்வரத்தில் மாலை நடைபெறவுள்ள காசி தமிழ்ச் சங்கமம் நிறைவு விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு அவர் உரையாற்றுகிறார்.

>>>>>><<<<<<<

இந்தியா - இலங்கை மீனவர் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக கூட்டு பேச்சுவார்த்தையை மீண்டும் தொடங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று மத்திய மீன்வளத்துறை இணையமைச்சர் திரு. எஸ்.பி. சிங் பாகல் தெரிவித்துள்ளார்.

ராமேஸ்வரம் பாம்பனில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இலங்கை சிறையில் உள்ள 10 இந்திய மீனவர்களின் பிரச்சினைக்கு தீர்வு காண, மீன்வளத்துறை, வெளியுறவு அமைச்சகம், உள்துறை அமைச்சகம், கடற்படை, மாநில அரசு ஆகியவை இணைந்து நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்தார்.

*Ditwa* புயல் காரணமாக இலங்கையில் ஏற்பட்ட பேரிடரில், அந்நாட்டு சிறையில் உள்ள தமிழக மீனவர்கள் பாதிக்கப்பட்டுள்ளது குறித்து இலங்கை அரசிடம் பேச்சு நடத்தப்படும் என்று அவர் கூறினார்.

முன்னதாக, பாம்பன் தெற்குவாடி பகுதியில், இலங்கை கடற்படையினரால் சிறை பிடிக்கப்பட்ட மீனவர்களின் குடும்பத்தினரை சந்தித்த அமைச்சர், அவர்களின் குறைகளை கேட்டறிந்தார்.

அப்போது மீன்வளத்துறையின் சார்பில், மீனவர்களுக்கான நலத்திட்ட உதவிகள் குறித்தும் திரு. எஸ்.பி. சிங் பாகல் அவர்களிடம் எடுத்துரைத்தார்.

>>>>>><<<<<<<

நாடு, கடந்த 5 ஆண்டுகளில் பொருளாதாரத்தில் அதிவிரைவாக வளர்ச்சியடைந்து வருவதாக தமிழக ஆளுநர் திரு. ஆர்.என். ரவி கூறியுள்ளார்.

சென்னையில் நடைபெற்ற இந்திய பொருளாதார சங்கத்தின் ஆண்டு மாநாட்டின் நிறைவு விழாவில் அவர் உரையாற்றினார்.

மத்திய அரசின் முத்ரா கடன் திட்டத்தின் மூலம். 52 லட்சம் பேரின் வாழ்க்கையில் மாற்றம் ஏற்பட்டுள்ளதாகவும், தமிழகத்திற்கு மட்டும் 3 லட்சத்து 25 ஆயிரம் கோடி ரூபாய் வழங்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும். 25 கோடி பேர் வறுமையிலிருந்து விடுவிக்கப்பட்டிருப்பதாகவும் திரு. ஆர்.என். ரவி கூறினார்.

மூன்று நாட்கள் நடைபெற்ற இந்த மாநாட்டில், உயர்கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த ஆயிரத்து 500-க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் மற்றும் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 140-க்கும் மேற்பட்ட பொருளாதார நிபுணர்கள் பங்கேற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>>><<<<<<<

தமிழகத்தில் மகளிர் முன்னேற்றத்திற்காகவும், அவர்களின் நலனுக்காகவும் ஆளும் திமுக அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

திருப்பூர் மாவட்டம், பல்லடத்தில் நடைபெற்ற கட்சியின் மகளிர் மாநாட்டில் உரையாற்றிய அவர், 50 விழுக்காடு இடஒதுக்கீடு சட்டத்தை நடைமுறைப்படுத்தும் வகையில், நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் நடத்தப்பட்டதாக கூறினார்.

தமிழக அரசின் சார்பில் மகளிர் நலனுக்காக நிறைவேற்றப்பட்டு வரும் பல்வேறு திட்டங்களை முதலமைச்சர் பட்டியலிட்டார்.

>>>>>><<<<<<<

அஇஅதிமுக ஆட்சியில் தொடங்கப்பட்ட பல்வேறு திட்டங்களை திமுக அரசு கிடப்பில் போட்டுள்ளதாக அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

திருவள்ளூரில் பிரச்சாரம் மேற்கொண்ட அவர், மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு சீர்கெட்டுள்ளதால், பல்வேறு குற்றச் சம்பவங்கள் நடந்து வருவதாக தெரிவித்தார்.

அஇஅதிமுக ஆட்சிக்காலத்தில் அந்நிய முதலீடுகள் அதிக அளவில் ஈர்க்கப்பட்டதாகவும், தற்போது ஆளும் திமுக அரசால் அதனை செய்ய இயலவில்லை என்றும் அவர் கூறினார்.

மத்திய அரசுடன் இணக்கமாக செயல்படாத காரணத்தால் தமிழகத்திற்கு கிடைக்க வேண்டிய திட்டங்களையும், நிதியையும் முழுமையாக பெற முடியவில்லை என்று திரு. எடப்பாடி பழனிசாமி குறிப்பிட்டார்.

>>>>>><<<<<<<

தமிழர்களுக்கும். தமிழ் கலாச்சாரத்திற்கும் பிரதமர் திரு. நரேந்திர மோடியும், பிஜேபியும் முக்கியத்துவம் அளித்து வருவதாக அக்கட்சியின் மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

*கோவை மாவட்டம், மலுமிச்சம்பட்டியில் நடைபெற்ற கட்சி நிகழ்ச்சியில் பேசிய அவர், வரும் சட்டப்பேரவை தேர்தலில் திமுக தோற்கடிக்கப்படும் என்று தெரிவித்தார்.*

*40 ஆண்டு கால பிரச்சினையாக உள்ள ஆனைமலை நல்லாறு திட்டம் நிறைவேற்றப்படவில்லை என்று அவர் குற்றம் சாட்டினார்.*

*கோவை மெட்ரோ ரயில் திட்டத்திற்கான அறிக்கை முறையாக அளிக்கப்படாததால், மத்திய அரசு அதனை திருப்பி அனுப்பியுள்ளதாக திரு. நயினார் நாகேந்திரன் கூறினார்.*

>>>>>><<<<<<<

*வைகுண்ட ஏகாதசியை ஒட்டி, தமிழகத்தில் உள்ள வைணவ திருத்தலங்களில் சொர்க்கவாசல் திறப்பு நிகழ்ச்சி இன்று அதிகாலை வெகுவிமரிசையாக நடைபெற்றது.*

*திருச்சி, ஸ்ரீரங்கம் ரங்கநாதர் கோவிலில் இந்நிகழ்ச்சி வெகுசிறப்பாக நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*(வாய்ஸ்பைட் – கதிரவன் 41 செகண்ட்ஸ்)*

>>>>>><<<<<<<

*மத்திய அரசின் வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதார இயக்கம் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.*

*இந்த இயக்கத்தின் மூலம், வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளவர்கள் பயனடைவார்கள் என்று ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயி ஒருவர் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.*

*(சவுண்ட் பைட் - விவசாயி 40 செகண்ட்ஸ்)*

>>>>>><<<<<<<

*மார்கழி மாதத்தை ஒட்டி சேலத்தில் நடைபெற்ற இசை நாட்டிய திருவிழாவில், மாநிலம் முழுவதிலுமிருந்து நாட்டியக் கலைஞர்கள் பங்கேற்றனர்.*

*இந்த திருவிழாவின் மூலம் மனஅழுத்தம் குறைவதாக நாட்டிய கலைஞர்கள் எமது செய்தியாளரிடம் தெரிவித்தனர்.*

*(சவுண்ட் பைட் - கலைஞர்கள் 36 செகண்ட்ஸ்)*

>>>>>><<<<<<<

*இருவரிச் செய்திகள்*

*அமைதி திட்டத்தின் கீழ், யுக்ரைனுக்கு 15 ஆண்டுகள் பாதுகாப்பு உத்தரவாதத்தை அளிக்க அமெரிக்கா முன்வந்துள்ளதாக யுக்ரைன் அதிபர் திரு. Valodymyr Zelenskyy தெரிவித்துள்ளார்.*

>>>>>><<<<<<<

*இந்தோனேஷியாவின் Manado நகரில் நேரிட்ட தீ விபத்தில் 16 பேர் உயிரிழந்தனர்.*

>>>>>><<<<<<<

*நாட்டின் தொழில்துறை உற்பத்தி கடந்த நவம்பர் மாதத்தில் 6 புள்ளி ஏழு சதவீதமாக அதிகரித்துள்ளது என்று மத்திய புள்ளியியல் அமைச்சகம் தெரிவித்துள்ளது.*

>>>>>><<<<<<<

*மும்பை - அலகாபாத் புல்லட் ரயில் திட்டத்திற்காக நிலம் கையகப்படுத்துதல் குறித்த உயர்நிலை குழுக் கூட்டம் நேற்று நடைபெற்றது.*

>>>>>><<<<<<<

*தேனி மாவட்டம், போடிநாயக்கனூரில் நலம் காக்கும் ஸ்டாலின் திட்டத்தின் கீழ் இன்று சிறப்பு மருத்துவ முகாம் நடைபெறவுள்ளது.*

>>>>>><<<<<<<

*ராமேஸ்வரத்திலிருந்து தாம்பரத்திற்கு இன்றிரவு மணி 9.15-க்கு முன்பதிவு செய்யப்படாத சிறப்பு ரயில் இயக்கப்படுகிறது.*

>>>>>><<<<<<<

*தருமபுரி மாவட்டம், இண்டூர் ஊராட்சியில் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி செலுத்தும் பணிகளை ஆட்சியர் திரு. சதிஷ் தொடங்கி வைத்தார்.*

>>>>>><<<<<<<

*திருப்பத்தூர் மாவட்டத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில் 87 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை ஆட்சியர் திருமதி. சௌந்தரவள்ளி வழங்கினார்.*

>>>>>><<<<<<<

*தேசிய துப்பாக்கிச் சுடுதல் சாம்பியன் போட்டியின், ஜூனியர் மகளிர் குழுப் பிரிவில் தமிழக அணி வெள்ளிப்பதக்கம் வென்றது.*

***தில்லியில் நடைபெற்ற இப்போட்டியில் தமிழக அணி 295 புள்ளிகள் பெற்று, இப்பதக்கத்தை கைப்பற்றியது.***

***தில்லி தங்கப்பதக்கத்தையும், ராஜஸ்தான் வெண்கலப் பதக்கத்தையும் வென்றன.***

**>>>>>><<<<<<<**